BITSMANS INSTITUTES Manipay
88 A/L
பொறியியலும் நீர்நிலையியலும்
[Mechanics and Hydro Statics]
ஆசிரியர்:
திரு. சௌந்தி B. Sc. (Hons.)
ஆரம்பம்: 02-02-1987
திங்கள் 3-30 p. m

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

Bitsmans Institutes Manipay
நடைபெறுகிறது
88 A/L
அசேதன இரசாயனம் (Inorganic)
ஆசிரியர்:
திரு. மகாதேவா B.Sc. (Hons)
நேர அட்டவணை
சனி, ஞாயிறு 12-30 p. m.

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஞு தை மீ 19 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 2 (01-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி: 56

★ 10 மணிநேரம் மும்முனைத் தாக்குதல்

# பருத்தித்துறையில் 8 சிப்பாய்கள் பலி

## சிறுவன் உயிரிழப்பு; 14பேர் காயம் மூன்று போராளிகள் வீரமரணம்

— பருத்தித்துறை உதயன் செய்தியாளர்; பி. ஆர். நாதன் —

பருத்தித்துறை, பெப்ரவரி.1

அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுப் பருத்தித்துறையில் நடைபெற்ற பத்து மணிநேரக் கடுஞ் சமரில் இராணுவத்தினர் எட்டுப்பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகள் மூவரும் வீரமரணம் அடைந்தனர்.

இடைவிடாது படையினர் நடத்திய மும்முனைத் தாக்குதலில் 14 வயதுச் சிறுவன் ஒருவன் பலியானான். பதினான்குக்கும் அதிகமான பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் நண்பகல் மூன்று மணி வரை பருத்தித்துறையில் மும்முனைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன;

நேற்று அதிகாலை 5 மணியளவில் பருத்தித்துறை இராணுவ பொலிஸ் கூட்டு முகாமிலிருந்து சுப்பர்மடம், கலைஞானி வீதி, விநாயக முதலியார் வீதி, பழைய தபாற்கந்தோர் வீதி ஆகியவை வழியாக சிப்பாய்கள் வெளியேற முயற்சித்தனர்.

அவர்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளிண்டர் தாக்குதலில் எட்டுச் சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இதனைபடுத்த கடும் மோதல் நிகழ்ந்தது.

இறந்த சிப்பாய்களின் சடலங்களை மீட்பதற்காக படையினர் விடாது தாக்குதல் நடத்தினர்.

சுப்பர்மடம், கதிரை வேற்பிள்ளை வீதி வண்ணாந்துறை வீதி ஆகிய

(4ம் பக்கம் பார்க்க)



### காயமுற்றோர் விவரம்

பருத்தித்துறை,பெப்.1

பருத்தித் துறையில் நேற்று படையினர் நடத்திய மும்முனைத் தாக்குதலில் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்போர் விவரம்:-

எம். கோபி (வயது18) எஸ்.குலம் (19), ந இந்திரன் (20), திருமதி நாராயணி அன்னபூரணி அம்மா (60), மகேஸ்வரன் கவிதாஸ் (6) -இவர்கள் ஐவரும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள்.

திருமதி க. யோகேஸ்வரி (19), செல்வி. கே. இராமச்சந்திரன் (8), செல்வி. துரைசிங்கம் மகாலட்சுமி (21). இவர்கள் மூவரும் நெல்லண்டையைச் சேர்ந்தவர்கள்.

செல்வி. ந சிவநந்தினி (10) -கூவில்.

திருமதி. செல்லையா இராசம்மா (வயது 40) -தும்பளை- மூர்க்கம்.

கே. செந்தில் (22)-புலோலி தெற்கு. வல்லிபுரம் இராசையா (77) -தம்பசிட்டி

எஸ். சங்கர்(23), எஸ். சந்திரன் (26)- இருவரும் மந்திகை. (உ-118)

### மதகுகளினுள் மக்கள் தஞ்சம்

யாழ்ப்பாணம்,பெப்.1

பருத்தித் துறையில் நேற்று மும்முனைத் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்காக ஏராளமான மக்கள் வீதிகளில் உள்ள அழுக்கு நீர் செல்லும் மதகுகளிற்குள் தஞ்சம் புகுந்தனர்.

திக்கம், வியாபாரிமூலை தம்பசிட்டி, சுப்பர்மடம், நாவலடி, அல்வாய் பகுதிகளில் இருந்தே ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

தொடர்ச்சியான ஹெலிக்கொப்டர் தாக்குதல் காரணமாக வீதி எங்கும் துப்பாக்கி துளைத்த அடையாளங்களும் காணப்பட்டன.

(உ-10)

## மறியற்போரை விஸ்தரிக்க முடிவு

யாழ்ப்பாணம் பெப் 1

மக்கள் வங்கிக்கிளைகள் முன் தற்போது நடத்தப்படும் மறியல் போராட்டத்தை ஏனைய அரச வங்கிகள் முன்பும் விரைவில் விஸ்தரிக்க யாழ்ப்பாணம் அடகு வைத்தோர் சங்கம் நேற்று முடிவு செய்தது

சங்கத்தின் பொதுக் கூட்டம் நேற்றுக் காலை மனோகரா படமாளிகையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

✱ மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது.

✱ ஏனைய அரச வங்கிகள் முன்பும் மறியல் போராட்டத்தை விரைவில் விஸ்தரிப்பது.

✱ வட மாகாணத்தில் உள்ள மக்கள் வங்கிக்கிளை ஒவ்வொன்றின் முன்னும் அதன் வாடிக்கையாளர்கள் எதிர் வரும் 3ஆம் திகதி செவ்வாய் காலை 7.30 மணிக்கு சமுகம் அளிக்க வேண்டும் எனக் கோருவது.

(உ-எ-10)

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க

## இந்திய மத்தியஸ்தர்கள் பிரபாவுடன் தொடர்பு

புதுடில்லி, ஜன. 31

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இந்திய மத்தியஸ்தர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே, பிரபாகரனுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

இப்படி 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

பெறுமதியான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக எரிபொருள் தடையை நீக்கும்படி இலங்கை அரசை ஒரு பக்கம் நெருக்குதல் வேண்டும்.

ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளைக் கோரவேண்டும்.

இது சம்பந்தமாக தேவையான உத்தரவாதங்களை இரு தரப்பினரிடம் இருந்து பெறுவதில் இந்திய மத்தியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எங்கு, எப்பொழுது இரு தரப்பாரையும் சந்திக்க வைப்பது என்று முடிவு செய்யும் முன்னர் இந்த உத்தரவாதங்கள் பெறப்பட வேண்டும்.

### முன்னுரிமை கிடைக்கவில்லை

வேறு அலுவல்கள் காரணமாக முன்னர் கொடுக்கப்பட்ட முன்னுரிமையை இலங்கைப் பிரச்சினைக்கு இந்தியாவினால் கொடுக்க முடியவில்லை.

ஆனால் இப் பிரச்சினையைப் பின்னுக்குத் தள்ளும் எண்ணமும் இந்தி

(4-ஆம் பக்கம் பார்க்க)

தோழயுள்ள படங்களைப் பார்த்தீர்களா?

இளைஞர் நாகமணி சந்திரன் இரண்டு கால்களையும் இழந்த நிலையில்இருப்பதை முதலாவது படத்திலும்-

ஜெய்ப்பூர்க்கால்கள் பொருத்தியபடி நிற்பதை இரண்டாவது படத்திலும் காண்கிறீர்கள்.

இவரைப் போன்றவர்களுக்கு உதவி, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுங்கள்.

(விவரணச் சிறப்பம்சம் 8-ஆம் பக்கத்தில்)

## ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதயன்-சஞ்சீவி உதவி நிதி

சாதாரண காலங்களில் மக்கள் கை, கால்களை இழந்து ஊனமாவது அனேகமாக விபத்துக்களால்தான்.

ஆனால், இப்போது தமிழ் மக்கள் ஷெல் குண்டுகளாலும், துப்பாக்கிக் குண்டுகளாலும் அடிக்கடி கை கால்களை இழந்து ஊனமாகின்றார்கள்.

அவர்களை பொதுவான சமூக நீரோட்டத்தில் இருந்து ஒதுக்கி வைக்கலாமா? காத்திராப் பிரகாரமாக உங்களுக்கு அப்படி ஒரு துரதிஷ்டம் ஏற்பட்டு விட்டால் நீங்கள் அதை விரும்புவீர்களா?

கால்களை இழந்தவர்களுக்குப் புது வாழ்வு கொடுப்பவை ஜெய்ப்பூர் கால்கள். அவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை வடக்கில் நிறுவுவதற்கு மூன்று லட்சம் ரூபா தேவைப்படுகின்றது

இது சம்பந்தமாக 9-12-1986இல் "உதவ வேண்டிய திட்டம்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட உதயனின் ஆசிரியத் தலையங்கத்தை வாசித்த அபிமானவாசகர் ஒருவர், ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலை நிதியை உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளே ஆரம்பிக்க வேண்டும் என்று விழைந்தார்.

அவர் விரும்பியதுபோலவே இந்த நல்ல தொண்டில் உதவ, வாசகர்களாகிய உங்கள் சார்பில், "ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதயன்-சஞ்சீவி உதவி நிதியை" ஆரம்பித்துள்ளோம்.

கருணை உள்ளங்கொண்ட அனைவரும் உதவ வேண்டிய இந்த நிதிக்கு நீங்களும் தாராளமாக உதவுங்கள்.

உங்கள் நன்கொடையைப் பணமாகச் செலுத்துவதானால் உதயன் பணிமனையில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்,

காசோலை மூலம் அனுப்ப விரும்புவோர் "நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்ற பெயருக்கு எழுதி ரேகோடிட்டு, பொது முகாமையாளர், உதயன் பணிமனை, இல: 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். இணைக்கும் கடிதத்தில் உங்கள், பெயர் விலாசத்தைத் தெளிவாக எழுதுங்கள்.

இந்த உதவி நிதிக்குச் சேரும் பணம், ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலையை நிறுவும் பணியில் ஈடுபட்டிருக்கும் அன்னையர் முன்னணியிடம் கையளிக்கப்படும்.

உதவி நிதிக்கு நன்கொடை புரிவோர் விவரம் உதயன் - சஞ்சீவிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

✱ ஊனமுற்றோரை ஒதுக்கி வைக்காதீர்கள்.
✱ அவர்களுக்கு மறுவாழ்வு கொடுங்கள்.
✱ தயங்காதீர்கள், தாராளமாக உதவுங்கள்.
✱ சிறு துளி பெரு வெள்ளம்.

நீங்கள்வழங்கும் சிறுதொகை பலருக்கு புதுவாழ்வு தரும்.

4,000 உழைப்பாளிகள் கொலை; அதனால்

# பட்டினிச் சாவு அபாயம் கிழக்கில்!

## எத்தியோப்பிய நிலை ஏற்படும் என்று எச்சரிக்கிறார் ஆயர்

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ஜே. பி. ரட்ணதுரை —

யாழ்ப்பாணம், பெப்.1

இனப்பிரச்சினை குறுகிய காலத்தில் தீர்த்தாலும் சரி, தீராவிட்டாலும் சரி, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பட்டினிச்சாவுகள் ஏற்படக்கூடிய பேராபத்தான நிலைமை உருவாகி இருக்கிறது.

திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் இதுவரை குடும்பத் தலைவர்களும், குடும்ப உழைப்பாளிகளும் சுமார் நாலாயிரம் பேர் கொலையுண்டுள்ளனர்.

அதன் காரணமாக எத்தியோப்பியாவில் உண்டானது போன்ற பட்டினிச் சாவுகள் கிழக்கில் ஏற்படும் அபாயம் உண்டு,

இவ்வாறு திருகோணமலை — மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் கிழக்கிலங்கை ஆயர் வண சுவாம்பிள்ளை உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்ததாவது:-

கிழக்கிலங்கையைச் சேர்ந்த சுமார் 3,000 தமிழ் இளைஞர்கள் வரை முகாம்களில் விசாரணை இன்றி தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

சுமார் 4,000 தமிழ் உழைப்பாளிகள் (குடும்பத் தலைவர்கள் உட்பட) அரசாங்கப் படைகளால் கொல்லப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு.

உழைப்பாளிகளை இழந்த அவர்களது குடும்பங்கள் ஜீவனோபாயத்துக்கு வழியின்றி பட்டினிச்

### சிறப்புச் செய்தி

சாவை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இன்றைய இனப் பிரச்சினை தீர்ந்தாலும் தீராவிட்டாலும் இக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டியவே. உழைப்பாளர், இளைஞர்கள் குடும்பங்களில் இல்லாமல் குடும்ப அங்கத்தவர்கள் சாப்பிடுவது எப்படி?

திருமலை, மட்டக்களப்பு மக்கள் வடபகுதி மக்களைப் போல் பண வசதி படைத்தவர்கள் அல்லர். அவர்களில் அனேகமானோர் அன்றாடம் காய்ச்சிகள். பெரும்பாலோர் விவசாயம், கடற் தொழில்களையே நம்பியுள்ளவர்கள்.

நிலம் பறிக்கப்பட்டு,

(4 ஆம் பக்கம் பார்க்க)

● கொக்கட்டிச்சோலையில்

## பலியான தமிழர்களின் எண்ணிக்கை 200 க்கும் அதிகம்

### பி பி சி நேற்றிரவு தகவல்

மட்டக்களப்பு, பெப் 1

கொக்கட்டிச்சோலை அதன் அயற் கிராமங்களில் ஆயுதப்படையினர் நடத்திய தாக்குதல்களில் உயிரிழந்த தமிழ்ப் பொது மக்களின் எண்ணிக்கை 200 க்கு மேல் இருக்கும் என்று பி பி சி வானொலி நேற்று இரவு அறிவித்தது.

மூன்று நாள் முற்றுகையின் பின்னர் அரசு மருத்துவக்குழு ஒன்று பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்குச் செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டது.

பாரதூரமான சூட்டுக் காயங்களுக்கு உள்ளான பொதுமக்கள் பலர் இன்னமும் காடுகளில் பயம் காரணமாக ஒழிந்து உள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாட்டுவண்டி ஊர்வலம் எரிபொருள்தடையை எதிர்த்து

யாழ்ப்பாணம்,பெப்.1

வடபகுதி மீதான எரிபொருள் தடையைக் கண்டித்து எதிர் வரும் வெள்ளிக்கிழமை (06. 02 1987) எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்துவது என்றும்— ஊர்வலத்தில் மாட்டு வண்டில்களை ஓட்டிச் செல்வதென்றும் -

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் திருநெல்வேலி, அரியாலை ஆகிய இடங்களில் நடத்திய ஆலோசனைக் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு அப்பால் வசிப்போர் சைக்கிள் ஊர்வலத்தில் வந்து பிரதான ஊர்வலத்துடன் கலந்து கொள்ள வேண்டும்

மேற்கண்ட தீர்மானங்களும் கூட்டங்களில் எடுக்கப்பட்டன.

இந்தக் கூட்டங்களில் பல வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

(மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

(உ-எ)

### முச்சந்தி முனி



ஓமோம்! ஓமோம்!! கட்டாயம் ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கு நம்மட ஆக்கள் உதவி செய்ய வேணும். . . . !

### சுபநேரம்

01-02-1987

ஞாயிற்றுக்கிழமை சுபநேரம்:
9. 36 முதல் 11. 06 வரை
ராகுகாலம்:
5.06 முதல் 6 36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஜே. ஆருக்கு எழுதிய கடிதம்:

## 2 முஸ்லிம் எம். பிக்கள் கையெழுத்திடவில்லை

புதுடில்லி, ஜன 31

கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறைத்தேர்தல் தொகுதியைப் பிரிக்க வேண்டாம்என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குக் கொடுத்த கடிதத்தில் பிரதி அமைச்சரும் சம்மாந்துறை எம். பியுமான ஜனாப் அப்துல் மஜீதும்பொத்துவில் முதலாவது எம். பியான ஜனாப் எம். ஐ. உதுமாலெவ்வையும் கையெழுத்திடவில்லை.

அந்த இரண்டு வரிக் கடிதத்தில் மூன்று எம் பிக்கள் மட்டுமே கையெழுத்திட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொத்துவில் 2 ஆவது எம் பி திருமதி ரங்கநாயகி பத்மநாதன், அம்பாறை எம் பி திரு தயாரத்ன, கல்முனை எம் பி ஜனாப் மன்சூர் ஆகியோரே அக்கடிதத்தில் கையொப்பமிட்டவர்கள்

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**சின்னஞ் சிறு விளம்பரங்கள்**

**சேவை**

NP - 150 கனன் (Canon) மூலம் தரமான / தெளிவான போட்டோஸ்ரற் பிரதி செய்து தரப்படும், ஞானம்ஸ் ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

**சன் கிளாஸ் யாருடையது ?**

ஷப்ரு நிதி நிறுவனத்தில் சில தினங்களுக்கு முன்னர் சன் கிளாஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் விவரங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.


இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தோரைவிட மேலும்

# ஒருலட்சத்து10 ஆயிரம் தமிழர் வீடுகளை விட்டு வெளியேற்றம்

யாழ்ப்பாணம், பெப் 1

1983-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள 10 ஆயிரத்து 881 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 485 தமிழர்கள் தமது வீடுகளைவிட்டு அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்,

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து பீதியினால் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்த அகதிகளின் எண்ணிக்கை இதில்சேர்க்கப்படவில்லை.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர்களில் 35 வீதமானோர் தமது மாவட்டங்களை விட்டு வெளியேறி பிற மாவட்டங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

62 ஆயிரத்து 796 அகதிகள் தமது உறவினர், நண்பர்கள் வீடுகளில் உள்ளனர்.

இவர்கள் திருமலை, யாழ்ப்பாண, முல்லைத்தீவுமாவட்டங்களிலேயே தங்கியிருக்கின்றனர்.

47 ஆயிரத்து 639 அகதிகள் திருமலை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 64 அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

அதிகளவு அகதிகள் முகாம்கள் (23) திருமலை மாவட்டத்தில் உள்ளன

அதிகளவு அகதிகள் (16,503) மன்னார்மாவட்டத்திலுள்ள இரு முகாம்களில் உள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-5)

## அமெரிக்க அரசுக்கு தெரியாமலேயே கூலிப்படை இயங்குகிறதாம்

### 'இந்து' நாளிதழில் பேட்டி

புதுடில்லி, பெப் 1

அமெரிக்க அரசுக்குத் தெரியாமல் இரண்டு, மூன்று அமெரிக்கக் கூலிப் படையினர் இலங்கை அரசுப் படைகளுக்கு உதவி வருகின்றனர்.

இரண்டு பாஸ்போட்டுக்களுடன் இவர்கள் இலங்கையில் இருக்கின்றனர் என்பதை அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இடையில் இலங்கையில் உள்ள சுமார் 20 வெளிநாட்டுக் கூலிப் படையினரில் அமெரிக்கர்களும் உள்ளனர் என்பதை இந்திய அதிகார பூர்வ செய்திஸ்தாபனங்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றன.

**பெல் விமானிகள்**

அமெரிக்காவில் உள்ள பெல் விமானக் கம்பெனி கடந்த ஆண்டு சில அமெரிக்க விமானிகளை இலங்கைக்கு அனுப்பியது.

துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களை ஓட்டும் பயிற்சியை இலங்கை விமானிகளுக்கு அளிக்கவே இந்த அமெரிக்க விமானிகள் இலங்கை வந்தனர்.

பயிற்சி அளித்த பின்னர் அந்த அமெரிக்கவிமானிகள் அமெரிக்கா திரும்பினர்.

அண்மைக்காலத்தில் வேறு வெளிநாட்டவருடன் சில அமெரிக்கக் கூலிப்படையினரும் இலங்கை வந்திருக்கின்றனர்.

இவர்கள்குறித்துஅமெரிக்க அரச விசாரணை ஆரம்பித்துள்ளது

இந்த அமெரிக்கர்கள் அமெரிக்கப் பிரஜை என்று அடையாளங் காட்டாமல் வேறு நாட்டுப் பாஸ்ப் போட்டோடு சென்றுள்ளனரா? என்பதை அறியவே இந்த விசாரணை.

இப்படி 'இந்து' நாளிதழில் பிரபல அரசியல் விமர்சகர்ஜீ கே.ரெட்டி எழுதியிருக்கிறார். (இ-எ)

**ஒலிப்பதிவு நாடா வெளியீடு**

யாழ்ப்பாணம், பெப். 1

'விநாயக மகத்துவம்' (இசை உரைச்சித்திரம்) நூல், ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை பாலர் ஞானோதய சபை காசி விநாயகர் ஆலய தேவஸ்தானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் பிரம்மஸ்ரீ சி கணேசலிங்கக் குருக்கள், சட்டத்தரணி நம சிவப்பிரகாசம், மஹாராஜ ஸ்ரீ சு. சாது சண்முகநாதக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோரும்.

பிரதம கல்வி அதிகாரி திரு. பொன். சோமசுந்தரம், திருமதி சசிதேவி கந்தையா, திருமதி வசந்தா வைத்திய நாதன், திரு. என். கே. பத்மநாதன், திரு. க. உமாமகேஸ்வரன், ஆத்மஜோதி நா. முத்தையா, அருட்கவி சீ. விநாசித்தம்பி, இசை வாருதி பிரம்மஸ்ரீ நா. வீரமணி ஐயர், சைவப் புலவர் வை. நாகராஜன், திரு. க. ப. சின்னராசா, திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவர்.

## பிரபாகரனின் யாழ் விஜயத்தின் நோக்கம் என்ன?

சென்னை, பெப். 1

நெருக்கடியான இக்காலகட்டத்தில் தமிழ் மக்களுடன் சேர்ந்து அவர்களின் துன்பங்களில் பங்கு கொள்வதே தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனின் யாழ் விஜயத்தின் முக்கிய நோக்கம்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் சென்னையில் தெரிவித்தன.

இது ஒரு நெருக்கடியான காலகட்டம். பொதுமக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு பொருளாதார யுத்தம் ஒன்றைப் பிரகடனப் படுத்தியுள்ளது. அதே நேரத்தில் இராணுவத் தாக்குதலையும் நடத்துகிறது.

இந்தநேரத்தில் மக்களுடன் சேர்ந்து அவர்களின் துன்பங்களில் பங்கு கொள்ளவே திரு பிரபாகரன் யாழ் செல்கிறார்.

இப்படிப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'புரொன்ட்லைன்' சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது (இ-எ)

## தமிழ் ஆசிரியருக்கு தமிழில் காசோலை

### கல்வி அமைச்சு பணிப்புரை

யாழ்ப்பாணம், பெப். 1

வடக்கு, கிழக்கு பகுதிகளில் கடமை புரியும் தமிழ் ஆசிரியர்களுக்கு அவர்களது சொந்த மொழியில் காசோலைகளை வழங்குமாறு கல்வித் திணைக்களத்தின் சகல அலுவலகங்களுக்கும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு தமிழில் எழுதப்பட்ட காசோலையையே வழங்க வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கு கல்வி அமைச்சு தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

தமிழில் காசோலை எழுதுவதற்கு மிகுந்த அக்கறை காட்டிய யாழ் கல்வித் திணைக்கள வழியர்களுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நன்றி தெரிவித்திருக்கிறது. (உ-10-11)

## மனித உரிமை மீறலுக்கு எதிராக இயக்கம்

யாழ்ப்பாணம், பெப் 1

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் அரசின்மனித உரிமைகள் மீறல், எரிபொருள் தடை என்பவற்றைக் கண்டித்து எதிர்ப்புஇயக்கம் ஒன்றை நடத்த உள்ளது

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ளதமது கிளைகள் மூலம் பரந்த அளவில் இந்த எதிர்ப்பு இயக்கம் நடத்தப்படவுள்ளதாக இயக்கச் செயலாளர் சொ. தேவராஜா தெரிவித்தார்,

எதிர்ப்பு இயக்க நடவடிக்கைக்கான ஆயத்தக் கூட்டங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் நடைபெறும்.

இக்கூட்டங்களில் சகல மாதர்சங்க, சனசமூக நிலைய, கிராம முன்னேற்றச்சங்க பொதுநல ஸ்தாபன அமைப்புக்களைக் கலந்துகொள்ளும்படியும் அவர் கேட்டுள்ளார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான தயாரிப்புக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெறும்.

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான தயாரிப்புக் கூட்டமும் இன்று தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 3-30 மணிக்கு நடைபெறும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான தயாரிப்புக் கூட்டம் நாளை 3 30 மணிக்கு புத்தூர் மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் நடைபெறும். (இ-5)

## செத்தல் மிளகாய் இறக்குமதிக்குத் தடை

கொழும்பு, பெப். 1

செத்தல் மிளகாய் இறக்குமதியை அரசாங்கம் தடைசெய்திருக்கிறது

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இந்த ஆண்டு செத்தல் மிளகாயை இறக்குமதி செய்யாது

மகாவலி அபிவிருத்திப் பிரதேசங்களில் இருந்தே கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் தேவையான செத்தல் மிளகாயைக் கொள்வனவு செய்யும்.

கடந்த ஆண்டு 10 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான 3,659 தொன் செத்தல் மிளகாயை கூட்டுறவு மொத்த விற்பனவுஸ்தாபனம் மகாவலி விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்தது

மகாவலி பிரதேசத்தில் சுமார் 35,000 விவசாயிகள் மிளகாய்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (உ-எ)

## வெளியார் தலையீட்டுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ் இந்துக்கல்லூரியின் செயற்பாடுகளைக் குலைக்கும் விதத்தில் வெளியார் தலையீடுகள் ஏற்படுவதை அனுமதிக்கலாகாது என யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகம் தெரிவித்திருக்கிறது.

யாழ் இந்துக்கல்லூரியின் அமைதியான நிர்வாகத்துக்கு ஊறு விளைவிக்கும்வகையில் கல்லூரி நேரத்தில் வெளியார் குழு ஒன்று கல்லூரிக்குள் நடந்துகொண்ட முறையைக் கண்டித்தும் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகம் வன்மையான கண்டனத்தை வெளியிட்டிருக்கிறது.

கல்லூரி அதிபர் அலுவலகத்தில் கல்லூரியின் அமைதியான நிர்வாகத்திற்கு ஊறு விளைவிக்கும் முறையில் பிரவேசித்து வெளியார்குழு நடந்து கொண்டதாகவும் ஆசிரியர் கழகம்சுட்டிக்காட்டியிருக்கிறது. (உ)

## குருநகர் மீனவர்கள் கடற்படையினரால் கைது!

யாழ்ப்பாணம், பெப். 1

குருநகர் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற பல மீனவர்களைக் கடற்படையினர் வெள்ளியன்று கைது செய்தனர்.

மண்டைதீவு இராணுவ முகாமை அண்டிய கடல் பகுதியில் இரண்டு பாரிய கப்பல்கள் கடந்த சில நாட்களாக தரித்து நிற்கின்றன.

இவற்றில் இருந்து இறங்கி பீரங்கிப் படகுகளில் வந்த கடற்படையினரே இவர்களைக் கைது செய்தனர். மீனவர்களது வள்ளங்களையும் தமது படகுகளுடன் இணைத்துக் கட்டி இழுத்துச் சென்றனர்.

... செய்யப்பட் ... டோரில் நீக்கலஸ் வின்சன்ட், நீக்கலஸ் யோன்சன் ஆகியோரின் பெயர்கள் மட்டுமே தெரிய வந்துள்ளது.

இதே வேளை நவாலியைச் சேர்ந்த மீனவர்களும் அவர்களின் நான்கு வள்ளங்களும் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே கடற்படையினரால் கைது செய்யப்பட்ட பல மீனவர்கள் வெள்ளியன்று விடுதலை செய்யப் பட்டனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர் எண்ணிக்கை தினமும் குறைந்து வருகிறது.

## ஆரியரத்ன- நாளை யாழ்நகர் வருகின்றார்

யாழ்ப்பாணம், பெப். 1

சர்வோதயத் தலைவர் ஆரியரத்ன நாளைதிங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

இதற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளது.

விசேட விமானமூலம் யாழ்ப்பாணம் வரும் இவரை விடுதலைப் புலிகள் வரவேற்பர்.

அரசாங்கம் விதித்துள்ள எரிபொருள்தடை காரணமாக மக்கள் படும் கஷ்டங்கள் பற்றியும் அவருக்கு நேரடியாக காண்பிக்கப்படும்.

இதே வேளை அரச அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்ட பல இடங்களை ஆரியரத்ன தலைமையில் வரும் நல்லெண்ணக் கோஷ்டியினர் பார்வையிடுவர். (உ-10)

## எரிபொருள் எடுத்து வருவோர் எரிக்கப்படுகின்றனரா?

யாழ்ப்பாணம்,பெப் 1

வெளி மாவட்டங்களுக்குச் சென்று எரிபொருள் எடுத்து வருவோர் மீது சிப்பாய்கள் எரிபொருளை ஊற்றிக் கொளுத்துகின்றனரா?

இப்பயங்கரம் மன்னார், பூநகரி, வவுனியா காட்டுப்பகுதிகளில் நடைபெற்று வருகின்றதா? என்ற ஒரு சந்தேகம் எழுந்திருக்கிறது.

சட்டவிரோதமான முறையில் வெளிமாவட்டங்களுக்குச் சென்று எரிபொருளை எடுத்து வருவோர் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருவதால் இராணுவ நடமாட்டம் பூநகரி, வவுனியா, மன்னார் காட்டுப்பகுதிகளில் அதிகரிக்கப்பட்டுள்ளதாம்,

இவர்களிடம் சிக்குவோரே இக்கதிக்கு ஆளாவதாகவும் தெரிய வருகிறது.

கடந்த ஒரு வாரகால ... பகுதிகளில் இருந்து எரி ... ஒரு குழுவினர் இன்றும் ... ணமாக இவர்களது பெற்றோர்கள் அவர்களைத் தேடிவருகிறார்கள். (உ-10)

## தமிழரின் விடிவு அதிக தூரத்தில் இல்லை

### இணைப்புக்குழு நம்பிக்கை

யாழ்ப்பாணம்,பெப். 1

கிழக்குமாகாண தமிழ் பேசும் மக்களுக்கு வட மாகாண தமிழ் பேசும் மக்கள் காட்டும் ஆதரவு தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கு அதிக தூரம் இல்லை என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் ... நடைபெற்றுவரும் அரசபடையினருக்கு எதிராகவும் வடபகுதி ... விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையையும் கண்டித்து நடத்தப்பட்ட ஹர்த்தால் அமைதியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது தமிழ் பேசும் மக்களின் வெற்றியாகும்.

தமிழ் பேசும் மக்கள் பொருளாதாரத் தடையால் பாதிக்கப்படவில்லை என அரசதரப்பினர் சிலர் விடுத்த கருத்தை இப் போராட்டம் முற்றாக முறியடித்துள்ளது. இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

'ஷப்ரு' ஆதரவு உதைபந்தாட்டம்:

## கிறீன் பீல்ட் வெற்றி!

### அரியாலையில் 'சூடு' பிடிக்கும் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் பெப். 1

'ஷப்ரு' யுனிகோபிஸன்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் நடத்தப்படும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் இறுதி நேரத்தில் சிறப்பாக விளையாடி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த வியாழக்கிழமை நாவாந்துறை சென் மேரீஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்திலேயே கிறீன்பீல்ட் அணி வெற்றி பெற்றது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் மிக விறுவிறுப்பாகவே விளையாடின.

இடைவேளைவரை இருசாராரும் தமக்குக் கிடைத்த பல கோல் போடும் சந்தர்ப்பங்களை மாறி மாறித் தவறவிட்டனர். கோல்கள் ஏதுமின்றி இரு அணிகளும் பக்கங்களை மாறிக் கொண்டதையடுத்து ஆட்டம் சூடு பிடித்தது.

முதலில் சென் மேரீஸ் வீரர் 20 யார் தூரத்தில் இருந்து வேகமாகக் கொடுத்த ஒரு உதை அந்த அணிக்கு சிறப்பான கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தது

அவ்வேளையில் ஆட்டத்தில் பின்தங்கிய கிறீன்பீல்ட் அணி பின்னர் ஒருவாறு சமாளித்து விளையாடி ஒரு வேகத்தை வரவழைத்துக் கொண்டது.

சற்று நேரத்தில் கிறீன்பீல்ட் வீரர் அருள்தாசன் உடலைக் குத்துக்கரணம் அடித்து நேரே வந்த பந்தை பின்பக்கமாக இருந்த கோல் காப்புக்குள் லாவகமாக செலுத்தினார்.

தொடர்ந்து சிறப்பாக விளையாடிய கிறீன்பீல்ட் அணி ஆட்டம் முடிவடைவதற்கு சற்றுமுன் அருள்தாசன் மூலம் மேலும் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

**பொற்பதி வெற்றி**

அன்றைய தினம் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை 5-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

பொற்பதி தரப்பில் பாலகுமார் 2 கோல்களையும், கிருஷ்ணன், மகேந்திரன், ஸ்ரீரூபன் ஆகியோர் தலா ஒரு கோலையும் அடித்தனர்.

அரியாலை தரப்பில் கிடைத்த ஏக கோலை பாலசுந்தரம் அடித்தார்.

இந்த ஆட்டத்துக்கு திரு எம் தேவதாசன் மத்தியஸ்தம் வகித்தார்

யாழ்ப்பாணம் முஸ்லிம் விளையாட்டுக்கழக அணிக்கும் சென் அந்தனீஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடந்த மூன்றாவது ஆட்டத்தில் சென் அந்தனீஸ் அணி மிக இலகுவாக 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அன்ரன், கொன்ஸாலஸ் ஆகியோர் தலா 2 கோல்களையும், மில்ரோய், ருஷின் ஆகியோர் தலா ஒரு கோலையும் அடித்தனர்.

சுமார் 35 யார் தூரத்தில் இருந்து முஸ்லிம் கழக வீரர் அஸ்கர் அடித்த பந்து முஸ்லிம் அணிக்கு ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தது.

இந்த ஆட்டத்துக்கு என் எம். நஸார் மத்தியஸ்தம் வகித்தார்,

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் அந்தக் கழகத்தின் ஏற்பாட்டிலும் யாழ் உதைபந்தாட்ட லீக்கின் மேற்பார்வையிலும் இந்தச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பெருந்தொகையான உதைபந்தாட்ட ரசிகர்கள் இந்தச் சுற்றுப் போட்டி ஆட்டங்களைக் கண்டு களிப்பதற்காகக் கூடி வருகிறார்கள். (உ)

**விளையாட்டரங்கு**

## போஷாக்கு மருத்துவ சேவைக்கு நடமாடும் சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ் மாவட்டத்தில் மருத்துவ வசதி குறைந்த பகுதிகளில் நடமாடும் போஷாக்கு மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்று நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதற்கான உதவிகோரி யாழ் மாவட்ட திட்டமிடல் பணியகத்தின் போஷாக்குப் பிரிவு, திட்ட செயலாக்கல் அமைச்சிடம் விண்ணப்பித்துள்ளது.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் மருத்துவ வசதி குறைந்த உடுவில், சங்கானை, ஊர்காவற்றுறை, கோப்பாய், சாவகச்சேரிப் பகுதிகள் நன்மையடையும்.

சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன் நடமுறைப் படுத்தப்படவுள்ள இத் திட்டத்தால் பெருமளவு கிராமப்புற மக்கள் பயன் அடைவார்கள் என்று திட்டமிடல் பணியக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-5)

## தங்கை தற் கொலை

திருகோணமலை, பெப். 1

அக்காவின் சுடும் சொல்லைத்தாங்க முடியாத தங்கை நஞ்சு குடித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

சந்தளாய், சிவன் கோயில் வீதியைச் சேர்ந்த சசிகரகுமாரி தங்கராசா (வயது 16) இப்படித் தற்கொலை செய்து கொண்டதாக மரண விசாரணையில் வெளியானது.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனப் ஏ. சி. ஏ அக்பர் மரண விசாரணை நடத்தினார். (இ-எ-150)

மின் பாவனை நிலுவை:

## கோப்பாய் பகுதியில் கடும் நடவடிக்கை

பலாலி, பெப். 1

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் கோப்பாய் உப-அலுவலகம் தனது எல்லைப் பரப்பில் உள்ள மின் பாவனையாளர்களது நிலுவையினைப்பெற கடும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

நீண்டகாலமாக மின் பாக்கியைச் செலுத்தாத மின்பாவனையாளர்களது மின் இணைப்பைத் துண்டித்து விடவுள்ளதாக அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

மூன்றுநாள் அவகாசம் வழங்கி, சிவப்பு அறிவித்தல், சம்பந்தப்பட்டவர்களிடம் நேரிலேயே வழங்கப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட அறிவித்தலுக்கு கவனம்செலுத்தாத சகல மின்பாவனையாளர்களது மின் இணைப்பும் துண்டிக்கப்படுமென்றும்-

மீள அவர்கள் இணைப்பு பெற வேண்டுமாஞல் அவர்கள் அதற்குப் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும்-

பழைய நிலுவைகளைச் செலுத்திய பின்பே அவ் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது (உ-119)

## கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 1

வவுனியா கூமாங்குளம் பகுதியில் பதுங்கி இருந்த சிப்பாய்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது அவர் சிப்பாய்கள் மீது கிரனேட் தாக்குதல் மேற் கொண்டார்.

27 ஆம் திகதி இரவு 7 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னர், சிப்பாய்கள் பதுங்கி இருந்த இடத்தில் இரத்தக் கறைகள் காணப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இதனால் சிப்பாய்கள் சிலர் காயமடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (உ-10)

10ஆம் ஆண்டிற்கு

## ஆங்கில பாடநூல் போதியளவு வரவில்லை

பலாலி, பெப். 1

வட பகுதிப் பாடசாலைகளுக்கு வழங்கப் பட்ட இலவச பாட நூல்களில் 10 ஆம் ஆண்டிற்கான புதிய ஆங்கிலப் பாடநூல் எதிர் பார்க்கப்பட்டதிலும் பார்க்க மிகவும் குறைவாகவே கிடைத்துள்ளன.

இதனால் மாணவர்களின் ஆங்கிலக் கல்வி பாதிக்கப்பட்டிருக்க வடபகுதிக் கல்விப் ... எம். எம். மன்சூர் இடைக்கால நடவடிக்கையினை மேற் கொண்டுள்ளார்.

10 ஆம் ஆண்டு ஆங்கிலப் புத்தகங்கள் கிடைப்பதற்கிடையில் 9 ஆம் ஆண்டுக்குரிய "இங்கிலீஸ் எவ்றிடே" என்னும் நூலின் முழு அலகினையும் திரும்பக் கற்பிக்கும்படி 10 ஆம் ஆண்டு வகுப்புகளுள்ள பாடசாலை அதிபர்களுக்கு திரு ஜனப். மன்சூர் அறிவித்துள்

**உதய சங்கற்பம்**

மனிதன் வெற்றியில் பயிலும் பாடங்கள் குறைவு; ஆனல் தோல்வியில் பயிலும் பாடங்கள் மிக அதிகம்.

—பம்மல் சம்பந்த முதலியார்.

உதயன்

இல, 15, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் — தொலைபேசி: 24805, 22073

01-2-1987 — த.பெ.23

## ஏ உலகமே! கண்ணிருந்தும் நீ குருடாவது ஏன்?

இலங்கை அரசாங்கப் படைகளின் இரத்த வெறிக்கு சுமார் 150 அப்பாவித் தமிழர்கள் இரையாகி இருக்கிறார்கள். இரண்டு நாட்களில் அவர்கள் செய்த அக்கிரமத்துக்கு குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள் என்ற பலதரப்பாரும் பலியாகி விட்டார்கள். கொக்கட்டிச் சோலையும் அதனைச் சூழ்ந்த கிராமங்களும் பிணக்காடாக மாறி விட்டன. சந்திக்குச் சந்தி தமிழர்களின் சடலங்களைப் போட்டு ரயர் அடுக்கித் தீ மூட்டி எரிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட பலரும் மட்டக்களப்புப் பிரசைகள் குழுவுக்கு கொடுத்த தகவல்கள் அரச படையினர் அரக்கத்தனமாக நடந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுவனவாக இருக்கின்றன.

போராளிகள் நடத்திய தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழர்களைச் சுட்டுப் பொசுக்குவது இலங்கை அரசாங்கப் படைகளுக்குச் சாதாரண காரியமாகிவிட்டது. தமிழர்களை குருவி சுடுவதுபோலக் கொன்று குவிப்பது அவர்களுக்கு ஒரு சின்ன விஷயமாகிவிட்டது.

படையினர் புரியும் அரக்கத்தனத்தை நியாயப்படுத்தும் விதத்தில் அரசாங்கம் நடந்து கொண்டால், அவர்கள் மிருகத்தனமாக நடக்க முற்படாமல் வேறு என்ன செய்வார்கள்?

அரச படைகள் அத்துமீறல் செய்கின்றன— அக்கிரமம் புரிகின்றன என்பதை, தன்னை இந்த நாட்டு மக்கள் அனைவரதும் தலைவராகப் பெருமையுடன் பிரகடனப்படுத்திவரும் ஜனதிபதி, பல தடவைகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஆனல் அவர்களில் எவர்மீதும் நடவடிக்கை எடுத்ததாக இல்லை. அதனாலேயே அவர்கள் மேலும் மேலும் அரக்கச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். சட்டபூர்வமான ஓர் அரசாங்கத்தின் படைகள் இரத்த வெறிபிடித்து அப்பாவிகளைச் சுட்டுக்கொல்வது வேறு எங்கே நடக்கிறது? அவர்கள் செய்வதை அரசு நியாயப்படுத்தினல் அரசும் சேர்ந்தே தமிழர்களை இனப்படுகொலை செய்கிறது என்பது தானகவே நிறுவப்படுகிறது.

இனப் படுகொலை நடத்திக்கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று அரசாங்கம் நினைக்கிறதா? அதனை உலக நாடுகளும் அங்கீகரிக்கின்றனவா?

யுத்தத்தில் அரசாங்கமோ அல்லது போராளிகளோ வெற்றி காண்பது கஷ்டம் என்று அடிக்கடி கூறிவரும் அரசு, அப்பாவி மக்களைக் கொல்வதன் மூலம் வெற்றி காணலாம் என நினைக்கிறதோ?

பிரச்சினைக்கு உரிய கிழக்கில் தமிழர் பலத்தைக் குறைத்துவிட்டால், அவர்களைச் சொந்த மண்ணில் இருந்து விரட்டி விட்டால் தனது காரியம் ஆகும் என்று அது நினைக்கிறதா?

திருகோணமலையில் தமிழர் பலத்தைக் குறைத்தாயிற்று. அங்கிருந்த அப்பாவித் தமிழர்களை ஆயிரக் கணக்கில் கொன்று குவித்தாயிற்று. பல்லாயிரக் கணக்கானவர்களை அகதிகளாக இடம்பெயர வைத்தாயிற்று.

அதே போல மட்டக்களப்பையும் மாற்றும் இரண்டாம் கட்டத்தை அரசு இப்போது செயற்படுத்தி வருகிறது. இரண்டு நாட்களில் 150 அப்பாவிகளை மிருகத்தனமாகக் கொல்வது என்பது சாதாரணமாக எழுந்த ஆவேசத்தினல் அல்ல. நிச்சயமாக திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்று. இதில் அரசாங்கத்துக்கே முழுப் பங்கும் உண்டு.

சிங்களப் பெருமக்களே! தமிழர்களை இப்படிக் கொன்று குவிக்க நீங்கள் அங்கீகாரம் வழங்கினீர்களா? அவ்வாறயின் தமிழர்கள் உங்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று நீங்கள் எவ்வாறு கேட்க முடியும்?

இந்தியாவே! இந்த இரத்த வெறிபிடித்த அரசு இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று நீ நம்புகிறயா? பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் கிடைக்கும், தமிழர்களை மனிதாபிமான ரீதியில் பாதுகாக்க முடியும் என நினைக்கின்றயா?

ஏ, உலகமே! உலக நாடுகளே! உலக மக்களே! உங்களது கண்கள் குருடாகி விட்டனவா? உலக அபிப்பிராயம் என்று ஒன்று இருப்பதாக இலங்கை அரசு கருத்தில் கொள்வதாக இல்லையே! தமிழர்களின் இரத்தத்தை குடிக்க வேண்டும் என்ற இரத்தவெறி கொண்டிருக்கும் அதற்கு உங்களாலும் புத்தி புகட்ட முடியாதா?

உங்களில் ஒரு சிலர் செய்யும் நிதி உதவியையும், ஆயுத உதவியையும் வைத்துத் தானே அது இப்படி இரத்த வெறி பிடித்து நிற்கிறது. அவற்றை நிறுத்தி தமிழர்களை மனிதாபிமான அடிப்படையிலாவது உங்களால் காப்பாற்ற முடியாதா?

ஓர் உயிரைக் கொல்வது பெரும் பாவம் என்று உங்கள் உன்னத மதங்கள் எல்லாம் போதிக்கின்றனவே, இரண்டு நாளில் 150 உயிர்களைக் கொன்றவர்களைத் தடுக்கத் தண்டிக்க உங்களுக்கு மனம் வந்தவில்லையா?

அவ்வாறயின் ஏ, உலகமே உலக மக்களே, நீங்கள் யாவரும் கண்ணிருந்தும் குருடர்களா? உங்களது பார்வை பழுதடையவில்லை என்றல், கொக்கட்டிச் சோலை படுகொலைகள் குறித்து விசாரிக்க ஒரு சுதந்திரமான விசாரணைக் குழுவை அனுப்புங்கள். உண்மையை அறியுங்கள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா? அந்த விசாரணையிலிருந்து இலங்கை அரசு எவ்வாறு தமிழ் இன அழிப்பில் ஈடுபடுகிறது என்பதை நீங்கள் புரிந்து

# உதயன் ஞாயிறு விவரணச் சிறப்பம்சம்

# நடைப்பிணமானேரை நடமாட வைக்கும் ஜெய்ப்பூர் கால்

## நல்லிதயம் கொண்டோரின் நற்பணி

1981 ஜனவரியில் ஒரு நாள் ...

கொழும்பு கோட்டை புகையிரதநிலையம் ஜனத்திரளால் நிறைந்திருக்கின்றது.

"காங்கேசன்துறைக்குச் செல்லும் புகைவண்டி இன்னும் சில விநாடிகளில் முதலாம் மேடைக்கு வரும்"

நிலைய ஒலிபெருக்கியில் ஒரு பரப்புக்குள் ஒலிபரப்புகிறார்கள்.

அல்லோலம் ஆரம்பம்; ஆட்களெல்லாம் பம்பரம்; தூரத்தில் ரயிலைப் பார்த்ததும் இயந்திரமாகின்றனர்,

"ஏனடா இந்த அந்தரம்" என வயதானவர்கள் வாய்க்குள் மந்திரமாய் முணுமுணுக்க ...

பாய்ந்தேற கால்கள் ஆயத்தம்.

சிற்பிடிக்க அங்கே சிறு யுத்தம்.

பாய்ந்தேறிக் கால்கள் தவறிடவே, ரயிலில் பயணம் போக வந்த இளைஞர் அம்புலன்சில் பயணமானர் கொழும்பு வைத்தியசாலைக்கு.

அவனதுசேர்ட் பையில் இருந்த அடையாள அட்டை அவனது விவரங்களை ஆஸ்பத்திரிக்குத் தந்தது.

பெயர்: நாகமணி சந்திரன்

வயது; 22

முகவரி; 10, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

உடன் சத்திரசிகிச்சையின்பின் வைத்தியசாலையில் உள்ள வார்ட்டில் உள்ள கட்டிலில் வளர்த்தப்பட்டு கால் முதல் இடுப்புவரை போர்வையால் போர்த்தப்படுகின்றன்.

சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்து கொண்டவன் சூழ்நிலையை புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன்.

புகையிரத நிலையத்தில் நடந்தவைகளை அவன் மனம் அடிமனத்திலிருந்து எடுத்து அசைபோட்டுப்பார்க்கிறது.

தனக்கேற்பட்ட காயங்களைக் கண்டறிய முயற்சிக்கின்றன். அதனல் உடலை ஆட்டிப் பார்த்தவன் அப்படியே ஆடிப் போகிறன்.

"டாக்டர் கால்களை அசைக்க முடியவில்லை ... வலிக்கிறது... ஏதும் பெரிய காயமோ? ..." கேட்டபடி டாக்டரைப் பார்க்கிறன்.

டாக்டர் ஏதும் பேசாது அவனது தோளை ஆதரவாக ஒரு கையால் பற்றியபடி, மறுகையால் இடுப்பில் மூடியிருந்த போர்வையை அகற்றுகிறர்.

நிமிர்ந்து... குனிந்து... கூர்ந்து பார்த்தவன் வேர்த்துப் போனன்.

அங்கே அவனது கால்கள் இரண்டும் துடைகளோடு துண்டாடப்பட்டு மொட்டையாகக் காட்சி தருவதைக் கண்டான்.

ரயில் சக்கரத்தால் தன் வாழ்க்கைச் சக்கரம் அசையாமல் போய்விட்டது என்பதை உணர்ந்தான்.

ஒருகாலம் ......... இரு கால்களும்.

ஒருக்கால் வாழ்க்கையே துண்டாடிப் போன மனநிலையில் திண்டாடிப் போனன்.

புரண்டு படுக்கக்கூட, இரண்டு பேரின் உதவி தேவைப்பட்ட நிலையில், அந்த தமிழ் இளைஞன் ஒன்றரை மாதங்களை வைத்தியசாலையில் கழித்தான்.

இவ்வாறு தனக்கு, நடக்க முடியாதவாறு, நடந்த கதையைக் கூறினர் அந்த இளைஞன் நாகமணி சந்திரன்.

இழந்த இரு கால்களுக்கும் முதன் முதல் ஜெய்ப்பூர் செயற்கைக்கால்கள் பொருத்தப்பட்ட யாழ் தமிழ் இளைஞரான அவரை 'உதயன்' வாசகர்களுக்காகச் சந்தித்த போதே தன் கதையை அவர் இப்படிக் கூறினர்.

கால்களை இழந்து நடைப்பிணமாக இருந்த அவர் இன்று நன்றாக நடமாடும் கதையைத் தொடர்ந்து கூறினர். அவற்றை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

தண்டவாளத்தில் கால்கள் துண்டாகிப் போன பின் துண்டாக நடக்க முடியவில்லை.

ரேட்டறிக் கழகம் அன்பளிப்புச் செய்த மூன்று சக்கர சைக்கிளில் இருந்தபடி—நடைப்பிணமாய் நடமாடினர்.

காலை இழந்து, வேலை இழந்து; பழைய மேசன் தொழிலை தொடர முடியவில்லை—முயலவில்லை.

ஒடித்திரிந்த கால்கள் ஒய்ந்து போனதையிட்டு மாய்ந்து போனலும், குடும்பத்தில் மூத்த மகனை அவர் தன் தம்பி தங்கைகள், வறுமையின் பிடியிலுள்ள பெற்றேர்களை உலைக்க விரும்பாது அவர்களுக்காக உழைக்க விரும்பினர்.

வீட்டோடு ஒரு சாதாரண சைக்கிள் கடையை தொடங்கினர் சந்திரன்.

இந்நிலையில் இவர் பற்றி அறிந்த யாழ் மாவட்ட அன்னையர் முன்னணியினர் இவருக்கு ஜெய்ப்பூர் செயற்கைக் கால்களைப் பொருத்தி உதவ முன்வந்தனர்.

யாழ் செயலக சமூக சேவைத் திணைக்களத்தின் உதவியுடன் கொழும்பிலுள்ள "Friend in need society" உடன் தொடர்பு கொண்டு ஆவன செய்தனர்.

சங்கமும் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஜெய்ப்பூர் செயற்கைக் கால்களை இலவசமாகத் தந்துதவ முன்வந்தது.

இதைத் தொடர்ந்து கொழும்பில் கால்கள் பொருத்தப்பட்டு, இரு மாதங்கள் கால்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

முன்னர் வாழ்வில் பிடிப்பின்றி ஏதாவது ஒரு பிடிமானத்துடன் எழுந்து நடமாடவேண்டிய நிலையில் இருந்த சந்திரன், இன்று எந்த வித பிடிமானமும் இன்றி வாழ்க்கையில் ஒரு பிடிப்புடன் நடமாடுகின்றர்.

அவரது சைக்கிள் கடையை விஸ்தரிக்க பண உதவி செய்ய அன்னையர் முன்னணியினர் முன்வந்துள்ளனர்.

அவரது தொழிலுக்கு உதவுமுகமாக 22 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று சக்கர சைக்கிள் ஒன்றை ஜப்பானில் இருந்து தருவித்து உதவ 'தேவைகளில் உதவும் நண்பர் சங்கம்' முன்வந்துள்ளது.

செயற்கைக் கால்களைப் பொருத்த முன்னின்று உதவிய அன்னையர் முன்னணித் தலைவி திருமதி. குணநாயகம், சமூக சேவைகள் திணைக்கள உத்தியாகத்தர் திரு. கே. இராமநாதன் தேவைகளின் உதவும் நண்பர் சங்கச் செயலாளர் திருமதி. சுவர்ணு பேடினன்ற், போக்குவரத்திலும் கொழும்பிலும் உடன் இருந்து உதவிகள் செய்த ஊர்ப் பிரமுகர் திரு. எஸ். ஜே. இராஜரட்ணம் ஆகியோரை என்றும் நன்றியுடன் தான் நினைவு கூருவதாக சந்திரன் கூறினர்.

பிச்சை போடுவதை லும் பிரதிபலனை எதிர் பார்க்கும் எமது சமூகத்தில் எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது, விளம்பரம் விரும்பாது, உதவி செய்து கால்களை இழந்து நடைப்பிணமானேரை நடமாட வைக்கும் இந்த நல்லவர்களை எப்படிப் பாராட்டுவது?

(உ-5)

எஸ். ஜே. பி. ரட்ணதுரை

## செய்திக்கொத்து

### உபகரணக் குறைபாடு நீங்கும்

பலாலி, பெப் 1

1987ஆம் ஆண்டில் அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கான உபகரணக் குறைபாட்டை இல்லாமல் செய்ய கல்விச் சேவைகள் அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

இதன்படி ஒவ்வொரு பாடசாலைகளிலும் இருந்தும், பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களைப்பற்றிய விவரங்களைக் கல்விச் சேவை அமைச்சின் சிரேஷ்டஉதவிச் செயலாளர் திரு. ஜே. ஏ ஆரியசேன கோரியுள்ளார்.

இவற்றை நேரில்சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பின் போது தீவுப் பகுதியில் உள்ள பாடசாலைகளின் குறைகள் அடங்கிய மகஜர் ஒன்று பணிப்பாளரிடம் கையளிக்கப்படும்.

(உ-167)

(உ.119)

### தைப்பூசவிழா

யாழ்ப்பாணம், பெப்.1

மருதனமடத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் நடத்தப்படவுள்ள தைப்பூசவிழா பெப்ருவரி மாதம் 7ஆம்திகதி நடைபெறும்.

தேசிய இளைஞர்சேவைகள்மன்ற இயக்குனர் திரு. எம். கே முத்துக்குமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்விழாவில் நிகழ்ச்சிகளாக நாடகம், பட்டிமன்றம், நடனம் என்பன இடம்பெறவுள்ளன.

இவ்விழாவிற்கான ஒழுங்குகளை இளைஞர் சேவைகள் அதிகாரிதிரு. கே. எஸ். கார்த்திக் மேற்கொண்டுள்ளார்.

(உ-5)

### புத்தகம் கிடைப்பதில்லை

வேலணை, பெப்.1

வேலணை கல்விவட்டாரத்திலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு இவ்வருடத்திற்கான புதிய புத்தகங்கள் சீராக வழங்கப்படவில்லை இதனல்இப்பகுதியிலுள்ளபாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

(உ-167)

### பணிப்பாளருடன் சந்திப்பு

வேலணை, பெப். 1

தீவுப்பகுதிப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்க தூதுக்குழு ஒன்று யாழ் மாவட்ட புதியகல்விப் பணிப்பாளர் ஜனைப்

### மண்ணுக்குள் புதையுண்டு மரணம்

வேலணை, பெப். 1

மண்ணைத் தோண்டி கல் எடுத்துக்கொண்டிருந்த பெண்மணிமீது மண்பிட்டி சரிந்து வீழ்ந்ததால் அப்பெண்மணிமண்ணுக்குள் புதைந்துமரணமானர்

இப்பரிதாப சம்பவத்திற்கு ஆளானவர் வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி வீரசிங்கம் (45 வயது). இவர் ஆறு பிள்ளைகளின் தாய்

இச்சம்பவம் வேலணை கிழக்கில் நடந்தது.

(உ-167)

### சாந்தி நிலயம் திறப்பு

வேலணை, பெப்.1

தீவுப்பகுதியில் இடம்பெற்ற எதிரியுடனன நேரடி மோதலில் வீரமரணமடைந்த சாந்தன், ஹரி, நிதி, ரஞ்சித் ஆகிய வீரவேங்கைகளின் நினைவாகவேலணை வங்களாவடிச் சந்தியில் வேலணை பொதுமக்களால் அமைக்கப்பட்டுள்ள சாந்தி நிலயம் (பந்தரிப்பு இடம்) கடந்த புதன்கிழமை வீரவேங்கை ஹரியின் தகப்பனர் திரு. நாகலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(உ-167)

## போராட்ட ஜெபம்

'ஜெபங்களில்நான் போராடுவது போல, நீங்களும் என்னேடு கூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும் ஆவியானவரின் அன்பினிமித்தமும் உங்களை வேண்டிக் கொள்கிறேன்' (ரோமர் 15 32)

ஞானக்கதிர்

ஜெபத்தின் இரண்டாவது பகுதி போராடி ஜெபிக்கும் ஜெபம்.


குழந்தை வளர்ந்து சிறுவனகும்போது, அந்த சிறுவன் பெற்றேரிடம் அழுது கேட்பதில்லை. உரிமையோடு போராடி கேட்பான். கொடுக்காவிட்டால் அடம் பிடிப்பான்; விடமாட்டான்.

அப்படியே கர்த்தரிடம் நாம் போராடிக் கேட்கும் ஜெபமுண்டு.

இந்த கடின போராட்ட ஜெபத்திற்கு நல்ல உதாரணம் யாக்கோபு தான். அவன் முழு இரவும் ... போராடினன். அவன் தொடை ... போதும் கூட தன் போராட்டத்தைநிறுத்த

வதித்தாலொழிய உம்மை விடுவதில்லை என்றுகேட்டுக் கொண்டபடியே, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். (ஆதி 32:24,25)

தேவபிள்ளையே, ஆசீர்வாதங்களுக்காக போராடி ஜெபி. பரிசுத்த ஜீவியத்திற்காக போராடி ஜெபி. ஜெபங்களில் நான் போராடுவது போல்... என்று பவுல் எழுதுகிறர். (ரோமர் 15:32) சுவிசேஷத்திற்காகப் போராடு (1 தெச 2:2) விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு (1தீமோ 6:12)



பாவத்திற்கு விரோத... (எபி 12:4) வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு போராடு. (எபே 6:12)



**பொய்யாமொழி**

குறள்:

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை

பொருள்:

பொருள் இழத்தற்குக் காரணமான ஊழ் பேதையாக் கும். பொருள் ஆவதற்குக் காரணமான ஊழ் அறிவைப் பெருக்கும்.

★ ஆப்கான்

# கிளர்ச்சியாளர்களுக்கு மன்னிப்புவழங்கமுடிவு

## தேசிய ஒற்றுமையை வளர்க்க நடவடிக்கை

காபூல் ஜன, 31

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சிவாதிகளுக்கு மன்னிப்பளித்துத் தேசிய ஒற்றுமையை வளர்க்கும் திட்டம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும்.

இவ்வாறு ஆப்கான் ஜனதிபதி டாக்டர் நஜிபுல்லா அறிவித்தார்.

யுத்த நிறுத்தத்திற்கோ சமரச முயற்சிகளுக்கோ உடன்பட கிளர்ச்சி இயக்கத் தலைவர்கள் மறுப்புத் தெரிவித்த போதிலும் அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ள சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கிளர்ச்சி இயக்கத்தில் அங்கம் வகித்த பெருந்தொகையானேர் அரசாங்கத்தின் மன்னிப்புச் சலுகையை ஏற்றுக் கொண்டு கிளர்ச்சி இயக்கத்தில் இருந்து விலகியுள்ளதாகவும் நஜிபுல்லா மேலும் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்ய துருப்புகள் அனைத்தும் காலக்கிரமத்தில் அகற்றப்பட்டுவிடும்.

ஆப்கான் அரச ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றை நடத்தவுள்ளது. இதற்கான தினமும் அடுத்த வாரங்களில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் ஆப்கான் ஜனதிபதி தெரிவித்தார். (ஒ)

## வட அயர்லாந்தில் குண்டுகள் வெடிப்பு

டப்ளின், ஜன 31

வட அயர்லாந்தில் தொடர்ச்சியான பல குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நேற்று நிகழ்ந்தன.

இவற்றிற்கு அயர்லாந்து விடுதலைப் புரட்சிகர இராணுவம் என்ற இயக்கம் உரிமை கோரியுள்ளது.

வடக்கு அயர்லாந்து விவகாரங்களில் முடிவெடுக்கும் உரிமையை அயர்லாந்துக்கு வழங்கும் உடன்படிக்கையை இந்த இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்தே இந்தக் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டுள்ளது.

இத்தாக்குதலில்பெரும் சேதம் ஏற்பட்டுள்ள போதிலும் விவரங்கள் எதுவும் வெளிவரவில்லை.

## ஸியாவிற்கு அழைப்பு

புதுடில்லி, ஜன. 31

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெறும் கிரிக்கெட் விளையாட்டைப் பார்க்க வருமாறு பாகிஸ்தான் ஜனதிபதி ஸியா அழைக்கப்பட்டுள்ளார்.

ஸியா இந்தியாவிற்கு வருவதாஞல் மார்ச் 22ஆம் திகதி புனேயில் அல்லது மறுதினம் நாக்பூரில் நடைபெறும் விளையாட்டுக்களைப் பார்வையிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ)

## செய்திச் சரம்

### ஈராக் தாக்குதல்

நேற்று ஏழு ஈரானிய நகரங்கள் மீது ஈராக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியது.

### எல்லைப் பிரச்சினை பேச்சுக்கள்

இந்தியா—பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்கான பேச்சுவார்த்தைகள் செயலாளர்கள் மட்டத்தில் ...

### சுட்டுக்கொலை

பெருநாட்டில் ஆளும் கட்சியின் நிர்வாக இயக்குனர் சிதலோபே சில்வா துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர்.

### கடும் நடவடிக்கை

பிலிப்பீன்ஸில் அரச விரோத சக்திகளுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்க ஜனதிபதி அக்கினோ ...

### பயணம்

அமெரிக்காவின் மூன்று முன்னுள் முக்கிய அரசியல் வாதிகள் விரைவில் ரஷ்யா பயணம் செய்ய...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months
Weekend Classes
Fees: Rs 1500/-
Commencement 24th January 1987
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

# உதயன்

01 - 02 - 1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
Commencement 24th January
வகுப்புகளும், செய்முறைகளும் பாதுகாப்பான இடத்தில்
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
வெளிநாடு செல்பவர்களுக்கோர் வரப்பிரசாதம்
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24204
13, Rasavinthodam Lane, Jaffna.

தமிழர் பெரும்பான்மையாக உள்ள

## இரண்டு மாகாணங்களை நிறுவ ஜே.ஆர். இணக்கம்

புதுடில்லி, ஜன. 31

தமிழர் பெரும்பான்மை மாகாணங்களை இரண்டை, வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அமைத்துக் கொடுக்க ஜனாதிபதி ஜெயவர்த்தன கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் இரண்டு மாகாணங்களும் இணைக்கப்படமாட்டா.

எனினும் இரண்டு மாகாணங்களுக்கும் பொதுவாக ஒரு மேல் நீதிமன்றம், திட்டமிடல், பொருளாதார பிரிவு ஆகியன இருக்கும்.

— இப்படி 'இந்து' நாளிதழ் தனது புதன் பதிப்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தூதர் பேர்னுட் திலகரத்தின கடந்த 27 ஆம் திகதி இணை அமைச்சர்கள் நட்வர்சிங், ப. சிதம்பரம் ஆகியோரைச் சந்தித்தார். அப்போது இலங்கை நிலைமை குறித்து மேலும் விளக்கம் கொடுத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிங்களப் பகுதிகளை விலக்கி புதிய கிழக்கு மாகாணம் ஒன்றை அமைக்க டிசம்பர் 19 இல் ஒப்புக்கொண்ட யோசனையில் இருந்து இலங்கை பின் செல்லவில்லை என்று இலங்கைத் தூதர் உத்தரவாதமளித்தார்.

— இப்படி 'இந்து' செய்தி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## 'பிரபா' புறப்பட்டது மனைவிக்குக் கூட தெரியாதாம்

### ஜூனியர் விகடன் தகவல்

யாழ்ப்பாணம், பெப் 1

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இலங்கை திரும்பிய போது அவர் இலங்கைக்குப் புறப்பட்ட விடயம் அவரது மனைவி மதிவதனிக்கே மறைக்கப்பட்டது.

அவ்வளவு இரகசியமாக அவர் இலங்கைக்குப் புறப்பட்டார்.

இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளிவரும் 'ஜூனியர் விகடன்' கட்டுரையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரபாகரன் தமிழீழம் போகும் நாள் மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

அதற்கு இரண்டு நாட்களுக்கு முன் ஒரே ஒரு சென்னை பத்திரிகையாளரிடம் மட்டுமே பிரபாகரன் விடைபெற்றார்.

ஜனவரி 4-ஆம் திகதி அவர் சென்னையிலிருந்து தலைமறைவானார்.

6 ஆம் திகதி பாக்கு நீரிணையை இரகசியமாக கடந்து யாழ்ப்பாணத்தை அடைந்தார்.

- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது (உ-5)

## ஆத்மசாந்தி பிரார்த்தனை

பருத்தித்துறை, பெப் 1

பருத்தித்துறையில் வீரமரணமெய்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி அமரர் ம. மணிவண்ணனுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இப்பிரார்த்தனை நடைபெறும்.

இந்த வைபவத்தில் பருத்தித்துறைத் தொகுதி கல்வி வளர்ச்சிக்கழக அமைப்பாளர் திரு சு. நடராசா தலைமையில் ஏனைய சக ஆசிரியர்களும் பங்குபற்றி இரங்கலுரை நிகழ்த்துவார்கள்.

(உ-118)

## 'ஆய்வு' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், பெப் 1

ஆய்வு சஞ்சிகையின் முதலாவது காலாண்டு இதழ் வெளியீடு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் தணைவேந்தர் பேராசிரியர் க. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். (உ)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.1

இணுவில் வட்டு விளிபதியுறை கண்ணகா பரமேஸ்வரி தேவி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் அலங்கார உற்சவத்தில் தினமும் 'வியாகரண சிரோமணி' பிரமஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் கலந்து கொண்டு சமயப் பிரசங்கம் செய்வார்கள். (உ)

## குளிக்க சென்றபோது குண்டு வெடித்தது

### வயோதிப மாது இலக்கானார்

யாழ்ப்பாணம், பெப்.1

வீட்டிலிருந்து புறப்பட்டு அருகேயுள்ள கிணற்றுக்கு குளிக்கச் சென்ற பொழுது கடலில் இருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டு எமது வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்தது.

இதனால் எனக்குக் காயங்கள் ஏற்பட்டன.

பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற மும்முனைத் தாக்குதலின் போது காயமடைந்த செல்லையா இராசம்மா (வயது 55) இப்படிச் சொன்னார்

இவருக்கு காலிலும் கழுத்திலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன

அவர் மேலும் சொன்னதாவது:-

நேற்றுப் பகல் பத்து மணி அளவில் பருத்தித்துறை பக்கமாக பலத்த குண்டு வெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டுக்கொண்டிருந்தன.

இடையிடையே கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் மேற் கொள்ளப்பட்டன.

எமது வீட்டுப்பக்கம் ஷெல் வராது என நினைத்து கிணற்றடிக்கு குளிக்கச் சென்றபோது பாரிய சத்தத்துடன் எமது வீட்டுமுற்றத்தில் குண்டு ஒன்று விழுந்து வெடித்தது.

இதனால் எனக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன.

இதேவேளை எனது வீட்டில் இருந்த மகாலட்சுமி (18 வயது) என்பவரும் காயமடைந்தார். அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்

- இப்படி அவர் சொன்னார். இவர் தும்பளையைச் சேர்ந்தவர். (உ-10)

## 3வயதுக்குழந்தையும் குண்டினால் காயம்

யாழ்ப்பாணம், பெப் 1

வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று வயதுக் குழந்தையும் நேற்றைய பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானது.

இராமச்சந்திரன் விஜிதா (3 வயது) என்ற தும்பளையைச் சேர்ந்த பெண் குழந்தையே இத் தாக்குதலுக்கு இலக்கானது

இக் குழந்தை வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சமயம் பெரும் புகையுடன் மரம் ஒன்றில் வந்து விழுந்து வெடித்துச் சிதறிய பீரங்கிக் குண்டினால் குழந்தை படுகாயமுற்றது

இக் குழந்தை யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது. (உ-10)

## கிழக்குப்படுகொலைகளை தடுத்து நிறுத்துங்கள்!

### ராஜீவிற்கு கூட்டணி தந்தி

சென்னை, ஜன.31

கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் கிராமங்களில் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகளில் இலங்கை அரசுப்படைகள் ஈடுபட்டு வருகின்றனர். இதைத் தடுத்து நிறுத்துங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய அவசரத் தந்தியில் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

வெளிநாட்டுக் கூலிப் படைகள் இந்த இன ஒழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளது.

அமைதிப்பேச்சுக்களைக் குழப்பும் முயற்சியாகவே இலங்கை அரசு இந்த இராணுவ நடவடிக்கையை எடுத்துள்ளது.

-இப்படி அந்தத்தியில் கூட்டணி தெரிவித்துள்ளது (உ-எ)

## கறுப்புக்கொடி ஏந்தி புதனன்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப் 1

இலங்கை அரசு அடக்குமுறையைக் கண்டித்து எதிர்வரும் நான்காம் திகதி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை அன்னையர் முன்னணி நடத்த உள்ளது.

ஊர்வலத்தில் பங்குபற்றுவோர் கறுப்புக் கொடி பிடித்துச் செல்வர்.

ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் ஆரம்பித்து யாழ் செயலகம் சென்றடையும்.

அன்றைய தினம் யாழ். செயலகத்தில் கறுப்புக் கொடி எதுவும் ஏற்றப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் அன்னையர் முன்னணி இணைச் செயலாளர் திருமதி ம. நடேசன் விடுத்தவேண்டுகோள் ஒன்றில் -

"அடக்கு முறைக்கு எதிரான உணர்வு அணைந்து விடாது தீயாய் வளர்ப்போம்.

இதை மனதில் கொண்டு எதிர்ப்பு ஊர்வலத்தில் சகல பெண்களும் அன்னையரும் கலந்து கொள்ள வேண்டும்." — என்று கோரியுள்ளார். (உ-எ)

## புலிகளின் முகாம்கள் சுற்றி வளைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், பெப். 1

நேற்றுவரை கொக்கட்டிச்சோலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் எந்த முகாம்களையும் அரசபடையினர் சுற்றிவளைக்கவும் இல்லை; கைப்பற்றவுமில்லை.

-இப்படி விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பவின் கவசவாகனம் சிக்குண்டு சிதறிய சம்பவத்தின்போது பின்வரும் ஆயுதங்கள் கொமாண்டோக்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன:-

* ஜி பி எம் ஜி. ரக ரைபிள் ஒன்று
* கோல்ற் கொமாண்டோ றைபிள்கள் இரண்டு.
* இரண்டு அங்குல மோட்டார்ஷெல் ஒன்று.
* 5.56எம் எம், 7 62 எம். எம். ரக ரவைகள் சில
* ஏ.கே, எல் எம் ஜி. றைபிள் ரவைக் கூடுகள் சில.

நேற்றுவரை கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவுப் பகுதியில் ஆங்காங்கே தாக்குதல்கள் இடம்பெற்றன.

பல கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் 2 பேர் மட்டும் சிறு காயமடைந்தனர். (உ)

## திருமலைக்கு நூறு தொலைபேசிகள்

### இணைப்புகள் வழங்க நடவடிக்கை

கொழும்பு பெப்.1

24 அலைவரிசை கொண்ட வானொலித் தொடர்பு மூலம் திருகோணமலை மாவட்டத்தில் குறைந்தது 100 தொலைபேசித் தொடர்புகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது

இது சம்பந்தமான தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் திருமலை பிரட்ரிக்கோட்டைக்குள் நிறுவப்பட்டு வருகின்றது.

முக்கிய அரச அலுவலகங்கள், பொலீஸ் நிலையங்கள், பிரிமா மா ஆலை, ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றுக்கு மட்டுமே தொலைபேசித் தொடர்பு வழங்கப்படும்.

தற்போதைக்கு வெளிமாவட்டங்களுடன் தொடர்பு கொள்ள முடியாது அழைப்புக்கள் பதிவு செய்யப்பட்டே வெளிமாவட்டங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (உ-எ)

## திறப்பு விழா

வடமராட்சி கல்வி வலயப் பணிமனை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கட்டடத்தில் நாளை திங்கட்கிழமை காலை 10-00மணிக்கு வட மாநில கல்விப் பணிப்பாளர் ஜனாப்.எம் எம். மன்சூரினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-118)

## இந்திய . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாவுக்கு இல்லை -

இப்படி 'இந்து' செய்தி கூறுகிறது

### திவாரி - ஹமீத் சந்திப்பு

சார்க் தலைமைக் காரியாலயத் திறப்பு விழாவுக்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் சாஹுல் ஹமீது காத்மண்டு சென்று இருந்தார்.

அப்போது இந்திய வெளியுறவு அமைச்சர் என்.டி. திவாரியை அவர் சந்தித்தார்

எரிபொருள் தடையை நீக்கி, அரசியல் கைதிகளை விடுவித்து மீண்டும் பேச்சுக்கள் நடத்தும் சூழ்நிலையை உருவாக்குங்கள் என்று திரு. திவாரி ஜனாப் ஹமீதை அப்போது கேட்டுக்கொண்டார்.

### ஜனாதிபதியுடன் தொடர்பு

ஜனாப் ஹமீது அங்கிருந்து ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டார்.

இலங்கையின் பிந்திய யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த தமிழர் தலைவர்கள், விசேடமாக தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வந்தால் மேற்கூறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்ய ஜனாதிபதி தயாராக இருப்பதாக ஜனாப் ஹமீது, திரு. திவாரியிடம் தெரிவித்தார்.

இப்படி 'இந்து' மேலும் தெரிவித்துள்ளது. (உ-எ)

உ
சிவமயம்

### திருமண அழைப்பு

மணமகன்: வேல் சிவானந்தன் B. A. (சிறப்பு) (சென். அந்தனீஸ் கல்லூரி, வத்தளை)

மணமகள்: அருந்ததி B Sc. (இலங்கை விவசாயப்பாடசாலை, குண்டசாலை)

காலம்: 02 - 02 - 1987 திங்கட்கிழமை பகல் 12.48 மணி முதல் 2.30 மணி வரையுமுள்ள சுப முகூர்த்த வேளையில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும்

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை விரும்பும்

அ. குணரத்தினம் தம்பதிகள்
தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை.

பொ சுந்தரலிங்கம் தம்பதிகள்
பழைய விதானையார் வீடு, துவாலை ஒழுங்கை, வல்வெட்டி.

## பருத்தித்துறையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் உள்ள போராளிகளின் அரண்களை நோக்கி ஹெலிக்கொப்டரிலிருந்து பலத்த தாக்குதல் நடத்தப்பட்டது. 2 அரண்கள் சேதமுற்றன.

ஆனால் அரண்கள் எதனையும் படையினரால் கைப்பற்ற முடியவில்லை

தம்பசிட்டி, ஆத்தியடி, கூவில், அல்வாய், வியாபாரிமூலை, தும்பளை வண்ணாத்துறை, கல்லூரி வீதி, விநாயகமுதலியார் வீதி ஆகிய மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை நோக்கி நூற்றுக்கணக்கான ஷெல்கள் ஏவப்பட்டன.

### கடலிலிருந்தும் தாக்குதல்

காலை 10 மணியளவில் கடற்படையின் பீரங்கிக் கப்பல் கடலிலிருந்து தும்பளை வியாபாரிமூலை, இன்பிருட்டி ஆகிய பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தின.

படையினர் நடத்திய மும்முனைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் புலிகளின் தாக்குதல் அமைந்திருந்தது

படையினரின் ஷெல் தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமடைந்தன.

விடியும் நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலினால் நித்திரை விட்டெழுந்த மக்கள் பீதியினால் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர்.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த 14 வயது சிறுவன் ஒருவனின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த புலிகள் இயக்கப் போராளிகள் மூவரில் ஒருவர் வண்ணாந்துறையைச் சேர்ந்த தியாகராஜா சிவயோகன் (கண்ணன்) வயது 20.

மற்றவர் முல்லைத்தீவைச் சேர்ந்த எம். முல்லை ஜனா. வயது 23.

நேற்றைய மோதலின் போது படையினர் முகாமிலிருந்து 400 யார் தூரமே முன்னேற முடிந்தது. எனினும் நேற்று மாலை அவர்கள் முகாமுக்குள் திரும்பிச் சென்றுவிட்டனர். (உ-118)

## பட்டினிச் சாவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடல் வலயம் போடப்பட்டு மக்கள் பட்டினி போடப்பட்டுள்ளனர்.

### தாக்குதல்

வடபகுதி மக்களுக்கு இராணுவம் முகாமை விட்டு வெளியே வந்தால் மட்டுமே பிரச்சினை இதனால் அவர்கள் ஓரளவாவது நிம்மதியுடன் உள்ளனர்

1 முக்கிலே இராணுவம், சிங்களவர், ஊர்காவல் படை போன்ற முத்தரப்புத் தாக்குதலுக்கு மக்கள் முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

திருமலையில் பட்டினத்தில் மட்டுமே குறைந்த எண்ணிக்கையில் தமிழர் உள்ளனர். பல கிராமப் புறங்களில் எந்தவொரு தமிழரையும் காணமுடியாது.

13 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களைக் குடும்பங்களில் காண்பது அரிது. மக்கள் காடுகளிலும் முகாம்களிலும் அகதிகளாக உள்ளனர்.

தமிழ் அகதிகளில் 75 விதமானவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களே.

வடபகுதியில் இராணுவத்தினர் முகாம்களை விட்டு வெளியேற முடியாத நிலையில் உள்ளனர் ஆனால் அந்த நிலைமை கிழக்கில் இல்லை

அரசும், வடக்கில் தான் விட்ட இந்தத் தவறை கிழக்கில் விடாத வகையில் மிகவும் கவனமாக உள்ளது. அருகருகே அனேக இராணுவ முகாம்களை அரசு அமைத்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து திருமலை செல்லும் வழியில், பத்துத் தடை முகாம்களைக் கடக்க வேண்டியுள்ளது.

அந்த முகாம்களில் என் மீதும், மத குருக்கள் மீதுமே அதிக சோதனை நடைபெறுகிறது

மதகுருமார் கொலை செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படமுடியாது

அடையாள அட்டைகளில் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ள எமது பெயரை வாசித்துவிட்டு "நீ முஸ்லீமா?" எனக் கேட்கும் சிப்பாய்கள் தான் அங்கே பணி புரிகிறார்கள் - இவ்வாறு ஆயர் தெரிவித்தார். (அ-5)

## பலியான....

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

இதனிடையில் கொக்கட்டிச்சோலையில் அமெரிக்க நிறுவனம் ஒன்று நடத்தி வந்த செரண்டிப் கடல் உணவுப் பண்ணையைதமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றி வைத்து இருந்தனர் என்ற இலங்கை அரசின் கூற்றை பண்ணையின் அமெரிக்க முகாமையாளர் மறுத்திருக்கின்றார்.

'பண்ணையை அமெரிக்க நிறுவனமே தொடர்ந்து நடத்தி வந்தது. லாபகரமாக நடந்து வந்த பண்ணையின் உற்பத்தி உச்சமாக இருந்து வந்தது.' பண்ணை முகாமையாளரான அமெரிக்க பிரசை திரு. பேர்ஸ்சியர் முன்கண்டவாறு தெரிவித்தார் என்று பி பி சி மேலும் தெரிவித்தது.

இந்த பண்ணையில் வேலைசெய்து வந்தவர்களில் 23 இளைஞர்களும் யுவதிகளும் படையினரால் மகிழடித்தீவுக்கிராமத்துக்கு டிராக்டர் டிரெயிலரில் கொண்டு போகப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பின்னர் வேறு 60தமிழர்கள் வரையில் அந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

எல்லாமாக ஆயுதப் படையினரால் பல இடங்களிலும் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 200க்கு அதிகம் என்று மட்டக்களப்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

-இப்படி பி பி சி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## நீத்தார் பட்டியல்

### திரு. ஆறுமுகம் ஏரம்பு

திரு. ஆறுமுகம் ஏரம்பு காலமானார்.

இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், மகேந்திரமணி கனகரத்தினம் (வேம்படி மகளிர் கல்லூரி), சிவசோதி (கனடா), செல்வசோதி, கலாசோதி (கனடா) தவசோதி (பிரான்ஸ்), ஜெயசோதி(பொறியியல் பீடம், மொறட்டுவை பல்கலைக்கழகம்). ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம் (பிரதான முகாமையாளர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), மயில்வாகனம் (பொறியியலாளர், கனடா), திலகவதி (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, முத்துவேலு, சிவக்கொழுந்து, மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரிக்கா, ராதிகா (வேம்படி மகளிர் கல்லூரி). நர்மதா தேவிகா, அனிரூ, மதுர்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை10 மணிக்கு 131/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி இல்லத்தில் நடைபெற்றுதகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்: திரு. கனகரத்தினம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 01 - 02 - 1987 தொலைபேசி இல. 24805, 23075
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ. 60 N 86. Telephone. 24805, 23075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org